DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.1 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சண்முகம் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.நடேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 29.09.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சேமன்வயலில் குடியிருந்து வருகிறேன், விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2018 ஆண்டு ஜீலை மாதம் தேதி நினைவில் இல்லை தொண்டி கனரா வங்கியில் நகைகளை அடகு வைத்துவிட்டு அதன் மூலம் கிடைத்த ரூ.3,00,000/- பணத்தையும் சில நகைகளையும் எடுத்துகொண்டு நான் அவ்வங்கியை விட்டுவெளியே வந்து ஒரு நபர் வரும் படி காத்து கொண்டிருந்தேன். நான் வைத்திருந்த பணம் நகை மற்றும் சில முக்கியஆவணங்களை ஒரு பையில்போட்டு

என்னுடைய TVS XL இருசக்கரவாகனத்தின் இருக்கைக்கும் கைபிடிக்கும் இடையில் உள்ள இடத்தில் தொங்கவிட்டு நான் என்னுடைய இருசக்கரவாகனத்தின்அருகே நின்று கொண்டிருந்தேன்.

2. அப்போது நான் சற்று திரும்பி நின்று கொண்டிருக்கையில் இரு நபர்கள் ஒரு இரு சக்கர வாகனத்தில் வந்தனர்.மேலும் நான் மேற்படி தொங்கவிட்டிருந்த பணம்,நகை ஆவணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பையை மேற்படி வந்த இரு நபர்களில் ஒரு நபர் அவர்கள் வந்த இருசக்கரவானத்தில் இருந்து இறங்கி அந்த பையை எடுத்துகொண்டு மற்றொரு நபர்இருசக்கர வாகனத்தை தயாராக வைத்திருக்க அதில் ஏறி சென்று விட்டனர். நான் அவர்களை விரட்டி சற்று துாரம் ஓடிசென்றேன்.ஆனால் பிடிக்கமுடியவில்லை. மேற்படி எனது பையை திருடி கொண்டுபோன இரண்டு நபர்களின் முகத்தை நான் சரிவர பார்க்கவில்லை. உடனே நான் தொண்டி காவல்நிலையம்சென்று அங்கிருந்த போலிசாரிடம் நடந்தவற்றை கூறினேன். நான் சொல்ல சொல்ல அங்கிருந்த போலிசார் ஒருவர் அதனை புகாராக ஒரு தாளில் எழுதினார். பின் மேற்படி தாங்கள்எழுதிய புகாரில் என்னிடம் கையொப்பம் பெற்றனர். என்னிடம்காட்டப்படும் புகார்மனு போலிசார் அன்றைய தினம் நான் சொல்ல சொல்ல எழுதிய புகார் மனுதான். அதில் இடம்பெற்றிருக்கும் கையொப்பம் என்னுடையதுதான்.**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. போலிசார் என்னை விசாரணை செய்து முடித்தபின் எழுதாத ஒரு வெள்ளைபேப்பரில் என்னிடம் கையொப்பம் பெற்றனர் என்றால் சரிதான். நான் புகார் மனுவில் இட்ட கையொப்பம் தான் மேற்படி போலிசார் எழுதாத வெள்ளைதாளில் என்னிடம் பெற்ற கையொப்பம் என்றால் சரிதான். நான் என்னிடமிருந்த திருடப்பட்ட பணம் மற்றும் நகைகளை நீதிமன்றத்தின் மூலம் திரும்ப பெற்று கொண்டேன் என்றாலும் அதனை யாரிடமிருந்து போலிசார் கைப்பற்றினர் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான்.

2. இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் எந்தவாகனத்தில் வந்து என்னுடைய பையை திருடிகொண்டு சென்றனர் என்றால் எனக்கு தெரியாது. நான்தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் எழுதிய புகார் மனுவிலும் போலிசார்விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

3. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தசம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.